Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 258/2020 PW-2**

Name : சண்முகம்
Father / Husband name : பெருமாள்
Village : நொளம்பூர்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.07.2025

A1, A2 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் டிரைவராக வேலை செய்கிறேன். இந்த வழக்கில் அசா.1 கோவிந்தராஜ் என்பவரை எனக்கு தெரியாது. விமலா எனது மனைவி. சுமார் 5, 6 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் காலை 7 மணிக்கு எங்கள் ஊர் திருவிழா நடந்தது. அப்போது எனது மனைவி சாமிகும்பிட சென்றபோது டிராக்டர் இடித்து முதுகு எலும்பு உடைந்துவிட்டதால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கு மருத்துவர் அவரை பரிசோதித்துவிட்டு முண்டியம்பாக்கம் அல்லது சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும்படி சொன்னார்கள். மருத்துவமனைக்கு வெளியில் இரண்டு ஆம்புலன்ஸ் இருந்தது, நான் அழைத்தபோது இரண்டு தனியார் ஆம்புலன்ஸ் டிரைவருள் யார் செல்வது என சண்டைபோட்டுக்கொண்டார்கள். மருத்துவமனைக்குள்ளே இருந்த போலிசாரிடம் எனது உறவினர் சொன்னார்கள். அதன்பின்னர் போலிசார் வந்து ஆம்புலன்ஸ் டிரைவரிடம் பேசியுள்ளார். நான் அப்போது அங்கில்லை, இரண்டு ஆம்புலன்சில் ஒரு ஆம்புலன்சில் எனது மனைவியை ஏற்றி சென்னைக்கு சென்றேன். மேற்படி இரண்டு தனியார் ஆம்புலன்ஸ் டிரைவர்கள் ஆஜர் எதிரிகளா என்று தெரியாது. 5, 6 வருடம் ஆனதால் நினைவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை

விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 11.05.2019 அன்று இரவு எங்கள் மனைவியை சென்னை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல இந்தியன் ஆம்புலன் டிரைவர்களான ஆஜர் எதிரிகள் அதிகமான தொகை கேட்டதால் நீங்கள் போனிலிருந்து TN 01 M 3211 சாமிஅன்கோ என்ற தனியார் ஆம்புலன்சை வரவைத்தீர்கள் என்றால் நான் வரவைக்கவில்லை. அந்த சமயத்தில் எதிரிகள் இரண்டுபேரும் அவர்களுடைய ஆம்புலன்சில் தான் நோயாளியை ஏற்றவேண்டும் என்று உங்களிடம் பிரச்சனை செய்து அசிங்கமாக உங்களை அசிங்கமாக திட்டினார்கள் என்றால் அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள், என்னை திட்டவில்லை. அப்போது அந்த பிரச்சனையை அ.சா.1 யிடம் நீங்கள் தெரிவித்து அவர் வந்து ஆஜர் எதிரிகளிடம் பேசியபோது அவரையும் எதிரிகள் இரண்டு பேரும் அசிங்கமாக பேசி முழுசீருடையில் இருந்தவரை நாய் என்று கேவளப்படுத்தி, பணிசெய்யவிடாமல் தடுத்து அவரை கையால் தள்ளிவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆம்புலன்ஸ் டிரைவர்கள் வாய்மொழியாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். ஒரு தரப்பில் எங்கள் தரப்பிலும் மற்றொரு தரப்பில் போலிசாரும் ஆம்புலன்ஸ் அழைத்துவந்ததாலும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி** - எங்கள் தரப்பில் யார் ஆம்புலன்சை அழைத்துவந்ததது என்று தெரியாது, எனது உறவினர்கள் நிரைய பேர் இருந்ததார்கள். இரண்டு டிரைவர்கள் வாய்மொழியாக பேசிக்கொண்டிருந்தபோது நான் அங்கிருந்தேனா என்றால் அப்போது தான் மருத்துவமனையிலிருந்து வெளியில் வந்தேன், நான் அந்த இரண்டு ஆம்புலன்ஸ்களில் ஒரு ஆம்புலன்சில் சென்றேன். இரண்டு ஆம்பிலன்ஸ் டிரைவர்கள் வாக்குவாதம் செய்ததை பார்த்தேனா இல்லையா என்றால் நான் எனது மனைவியை அழைத்துச்செல்லும் அவசரத்தில் கவனிக்கவில்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 258/2020 PW-3**

Name : அருண்ராஜ்
Father / Husband name : ஏழுமலை
Village : நொளம்பூர்
Age : 33
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.07.2025

A1, A2 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் டிராவல்ஸ் வைத்துள்ளேன். இந்த வழக்கில் அசா.1 கோவிந்தராஜ் என்பவரை எனக்கு தெரியாது. அ.சா.2 சண்முகம் எனது சித்தப்பா. விமலா எனது சித்தி. சுமார் 2, 3 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் காலை 7 மணிக்கு எங்கள் ஊரில் சாமி ஊர்வலம் வந்தபோது எனது சித்தி சாமிக்கும்பிடுவதை பார்க்காமல் டிராக்டர் இடித்து முதுகு எலும்பு உடைந்ததால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்தச்சென்றோம். அங்கு மருத்துவர் அவரை பரிசோதித்துவிட்டு சென்னை அல்லது முண்டியம்பாக்கம் அழைத்துச்செல்ல சொன்னார்கள். நாங்கள் சென்னை அழைத்துச்செல்ல முடிவு செய்து தனியார் ஆம்புலன்கள் இருந்ததால் எனது மாமா தீர்த்தமலை அதில் ஒரு ஆம்பிலன்சை அழைத்துவந்தார். அந்த ஆம்புலன்சின் மூலம் சென்னை அழைத்துச்சென்றோம். மருத்துவமனைக்கு வெளியிலிருந்த தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களும் மாமா அழைத்துவந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கும் ஓட்டுநர்களுக்குள் வெளி ஆம்புலன்ஸ் நாங்கள் அழைத்துவந்ததால் அதற்காக சண்டை வந்திருக்கலாம். அதன்பின்னர் நாங்கள் ஒரு ஆம்புலன்சில் சென்றுவிட்டோம். அதன்பின்னர் என்ன நடந்தது என்று தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 11.05.2019 அன்று TN 01 M 3211 பதிவுஎண் கொண்ட சாமிஅன்கோ என்ற தனியார் ஆம்புலன்சை நீங்கள் தான் வரவைத்தீர்கள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் நான் சொல்லவில்லை. அப்போது எதிரிகள் இந்தியன் ஆம்புலன்சின் ஓட்டுநர்கள் அவர்கள் ஆம்புலன்சில் தான் நீங்கள் செல்லவேண்டும் என்று பிரச்சை செய்து உங்களையும், அ.சா2. ஐயும் அசிங்கமாக பேசினார்கள் என்றால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் அவர்களுக்குள்ளே தான் சண்டைபோட்டுக்கொண்டார்கள். அப்போது அந்த பிரச்சனையை அ.சா.1 யிடம் நீங்கள் தெரிவித்து அவர் வந்து ஆஜர் எதிரிகளிடம் பேசியபோது அவரையும் எதிரிகள் இரண்டு பேரும் அசிங்கமாக பேசி முழுசீருடையில் இருந்தவரை நாய் என்று கேவளப்படுத்தி, பணிசெய்யவிடாமல் தடுத்து அவரை கையால் தள்ளிவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.